சுற்று நிருப இல: HRD/EQD/2002/20


දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 784807, 784832

ලේකම් / செயலாளர் / Secretary: 784811

කාර්යාලය / அலுவலகம் / Office: 785141-50, Fax: 784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : secedu@sltnet.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. ....................

මානව සම්පත් සංවර්ධන, අධ්‍යාපන හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය

மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு

Ministry of Human Resources Development, Education & Cultural Affairs

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල.

'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை, பத்தரமுல்ல.

"Isurupaya", Sri Jayawardhanapura Kotte. Battaramulla.


பாடசாலை செயற்பாட்டுக் கிளை

මගේ අංකය / எமது இல. / My No. 2/பாது/4/28

දිනය / திகதி / Date 2002.08.15

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலைகளின் அதிபர்கள்,
சகல பிரிவெனாக்களின் பிரிவெனாதிபதித்தேரர்கள்

**5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் உதவிப் பணம் வழங்குவதற்குக் கருத்திற் கொள்ளப்படுவதற்கான பெற்றோர்கள்/சட்டபூர்வமான பாதுகாவலர்கள் ஆகியோரின் வருடாந்த வருமான எல்லையைத் திருத்தி அமைத்தல்**

5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் உதவிப் பணம் வழங்குவதற்குத் தற்போது கருத்திற் கொள்ளப்படும் பெற்றோர்களின்/சட்டபூர்வமான பாதுகாவலர்களின் வருடாந்த வருமான எல்லையாக்க கொள்ளப்படுவது 6000.00 ரூபாவாகும். அதாவது மாதமொன்றிற்கு 500.00 ரூபாவாகும். இந்த வருமான எல்லை கடந்த 24 ஆண்டுகளாக அமுலிலிருந்து வருகின்றமையால் காலத்திற்குப் பொருத்தமான முறையில் அதை மாற்றியமைப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

02. அதன்படி 2004 ஜனவரி மாதம் தொடக்கம் உதவிப் பணம் வழங்குவதற்காகக் கருத்திற் கொள்ளப்படும் பெற்றோர்களின்/சட்டபூர்வமான பாதுகாவலர்களின் சகல வகைகளிலும் பெற்றுக் கொள்ளப்படும் மொத்த வருடாந்த வருமானம் 24,000.00 ரூபாவாகவோ அல்லது அதற்குக் குறைவாகவோ இருக்க வேண்டும். அதாவது மாதமொன்றிற்கு 2000.00 ரூபாவாகவோ அதற்குக் குறைவாகவோ இருக்க வேண்டும். சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் நடாத்துவதால் கிடைக்கப் பெறும் உதவிப் பணம் இவ்வருமான எல்லைக்குட்படுவதில்லை.

03. இதன்படி மேற்படி திருத்தம் 2003ஆம் ஆண்டு தொடக்கம் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்காக அமுலில் இருக்கும்.

I. உதவிப் பணம் உரித்தாகும் புதிய வருமான எல்லையாகிய ரூபா 24000.00 செல்லுபடியாவது 2003ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெறும் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரமே.

II. இவ்வருமான எல்லையின் வேறுபாடு 2003ஆம் ஆண்டில் 5ஆம் தரத்திற்குச் சேரும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குப் பொருந்தாது. புதிய வருமான எல்லை திருத்தத்தின் கீழ் உதவிப் பணம் வழங்குதல் 2004ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெறும்.

04. 2003ஆம் ஆண்டிலிருந்து உதவிப் பணம் வழங்கும் போது இச்சுற்றுநிருப அறிவுறுத்தல்களின்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தயவாய் அறிவிக்கின்றேன்.

வி.கே.நாணயக்கார
செயலாளர்,
மனிதவள அபிவிருத்தி கல்வி
கலாசார அலுவல்கள் அமைச்சு.

பிரதிகள்

1. பரீட்சை ஆணையாளர் நாயகம் - இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
2. தவிசாளர்-தேசிய கல்வி ஆணைக்குழு
3. பணிப்பாளர் நாயகம்-தேசிய கல்வி நிறுவகம்
4. பிரதம கணக்காளர்-கல்வி உயர்கல்வி அமைச்சு
5. சகல பிரதேச செயலாளர்கள்